UNIVERSITY OF JAFFNA LIBRARY 2000 PERIODICALS

SEND IN YOUR NEWS TO
THE EDITOR
THE MORNING STAR
NO. 39, FUSSELS LANE,
COLOMBO-06.
SRI LANKA.

# THE MORNING STAR

*Registered as a News Paper at the General Post Office, Sri Lanka*
*Established 1841 A Christian weekly Published Every Friday*
Vol. 161 - Jaffna - Friday 30th Septemper 2000 No. 18
*Righteousness Exalteth A Nation But Sin is a Reproach to any people.*

MORNING STAR RATES:
Annual Subscription-Foreign $ 10.00
Life Subscription Foreign $100.00
Annual SubscriptionLocal Rs. 100.00
Life Subscription - Local Rs.1000.00
THE MORNING STAR
NO. 39, FUSSELS LANE,
COLOMBO-06.
SRI LANKA.

## Bishop Kulandran Tomb at Manipay Cemetery



On the grace of Bishop Kulandran & Mrs. Mathuramma Kulandran

### BISHOP KULANDRAN'S 100TH BIRTHDAY:

*The Jaffna Diocese of the Church of South India celebrated the 100th birthday of its first Bishop the late Rt. Rev. Dr. Sabapathy Kulandran on the 23rd September. A tomb was built at his grave before his 100th birthday. It was from the donation of his children & grandchildren. The verse "But thanks be to God, who gives us victory through our Lord Jesus Christ" ( 1 Cor. 15:57), the often quoted verse of the late Bishop was inscribed on the tomb. The tomb was designed by Mr. G. Rajanayagam, the Secretary of the mission hospitals.*

*In the early hours of the 23rd September, young and old assembled at the tomb and conducted a bajan. The singing was led by Bishop Jebanesan, Mrs. Jeeva Ratnasabapathy and Mr. P. Thevamithiran.*

*This was followed by a Communion Service at Manipay Church. The service was led by Rev. N.T. Jeyanesan, the parish minister. The Bishop preached on the text Hebrew Chapt. 11: 1 "Faith is the substance of things hoped for and evidence of things not seen".*

*There was a public meeting in the Hall of Manipay Memorial English School.Rev. D.R. Ambalavanar, Dr. (Miss) C.V. Selliah and Mr. G. Rajanayagam spoke about the faith and scholarship of Bishop Kulandran. Rev. A.A. Paul, Principal of Jaffna College presided over the meeting. A narration written by Rev. V.N. Tharmakulasingam was effectively rendered by the students of the Christian Theological Seminary, Chunnakam. A Play depicting various aspects of Bishop Kulandran was staged by the students of Levi Spaulding Boys' Home. The play was written by Mrs. Jeevananthini Amaldas and directed by Chandran Francis of the staff of the Jaffna College, Vaddukoddai. The participants took part in a fellowship lunch at Arulmanai Boys' Home after the public meeting.*

### Releasing of "Thamil Aruvi"

*"Thamil Aruvi", the annual magazine of the Thamil Manram of Jaffna College was formally released on Tuesday the 26th September. The function was presided over by the Principal of the College. Mr. R. Thirumurugan of the Staff of Skandavarodaya College congratulated the Thamil Manram on the publication. Bishop S. Jebanesan spoke about the connection between Jaffna College and Tamil Research. Dr. S. Sivalingarajah, Head of the Dept of Tamil, University of Jaffna gave a review of the magazine. Mr. P. Arunthavanathan, Manager of the Magazine replied. Mr. K. Kumaravel, Lecturer in Economics at Jaffna College High School and Undergraduate Department proposed the vote of thanks.*

## PEACE AWARD

The former South African President Nelson Mandela, has been awarded the Methodist Peace award on the 21st of September 2000, at a ceremony in Cape Town. Mr. Joe Hale the General Secretary of the World Methodist Council and Francis Alguine President of the World Methodist Council were present on the occasion.

### Nuwara Eliya Girls' Home

The Jaffna Diocese has purchased a 37 perches block of land in the Nuwara Eliya Town, to house the Ambalavanar Girls' Home inmates. This new home is to be built from funds raised by the Indiana Kentucky Conference. At present there are around 25 girls housed in a rented bungalow. At the moment the plans are on the drawing board stage and it is hoped that the buildings would be ready for occupation by mid 2001.

### An interesting debate

At the Diocesan festival this year Rev. P. Suriyakumar organised a debate on evangelism in Jaffna. One group argued that the chief obstacle in evangelism was improper methods of evangelism. This group was led by Rev. Jude Sutharshan, who was ably assisted by Mr. B. Rodrigo, Bro. S. Ruban and Mr. D.S. Solomon.

The other group argued that the chief hindrance to evangelism was the indifference of the people. This group was led by the Rev. G. Mynaseelan. He was assisted by Miss. Ajitha Ariathas, Bro. K. Selvantha and Miss. S. Vijitha.

Rev. J. Jebamohan of the Anglican Church , who served as the moderator declared the group which spoke on the indifference of the people, winners of the debate.

### David & Goliath

David & Goliath which was rendered in the form of folk drama (Nattu Koothu)by Navaliyur N. Selvadurai was staged. It was directed by the author. The students of the Levi Spaulding Home did the acting and singing. The acting of Master S. Jeyaranjan who played the role of Goliath and Master N. Arulraj who acted as David were well appreciated by the audience.

---

Incomprehensible is the flashbacks albeit,
Just one experience of many I write
For those who say, "It is all right,
After all for a just cause that we fight".

The silence of the long dark night
Which followed the 'sulfur rain' of the daylight,
Was broken by the 'thunder' and the paralight,
Emitted by the canons so might,
Melted my organs within me in fright
And changed my countenance into ghostly white.
My fondest hopes were in blight
As I thought of my desperate plight.

At day break my child wanted to be fed
I had stale, 'sand' sandwiched bread
Still cramped in the bunker my three year old said,
"Mum, lets sing grace and thank God without fail

Oh Yes! But what do we thank God for?
For my kindred who fight the bloody 'holy war'?
For sparing us, when others are blown into pieces?
For those whose slogan is 'war for peace'?
For those who still debate, the 'peace package',
While part of the nation goes into wreckage?
For those who strategize the war for fame?
Or who play it, just to win the game?

The episode continues, with more sophisticated weapons,
But my heart bleeds, for the helpless ones,
If only we try the humane, just but once,
The vicious cycle of violence will cease at once

*Thaya Thiagarajah*

# மறைந்த பேராயர் சபாபதி குலேந்திரன் கடந்த நூற்றாண்டின் சொத்து

மறைந்த பேராயர் மாண்புமிகு சபாபதி குலேந்திரன் அவர்களின், நூற்றாண்டு நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த வாய்ப்பை எனக்குத் தந்தமைக்காக, ஆண்டவனை ஸ்தோத்தரிக்கின்றேன்.

எமது மறைமாவட்டத்தின் கலங்கரை விளக்காகத் திகழ்ந்த பேராயரின் வாழ்வும் பணியும் நீங்கள் அறியாதது அல்ல. அவரின் வாழ்க்கை வரலாற்றை எமது இன்றைய பேராயர் மதிப்புயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் ஒரு நூலாகவே எழுதியிருக்கிறார். எனினும் மறைந்த பேராயரின் வாழ்வை, பணியை, செயற்திறன்களை, மீண்டும் நினைவுகூருவது, அசைபோடுவது, எம்மனேகர்க்கு மனநிறைவையும் மகிழ்வையும் தருகின்றது.

மறைந்த பேராயர் சபாபதி குலேந்திரன் அவர்கள் எமது மறை மாவட்டத்தைப் பல்வேறு இக்கட்டான சூழ்நிலையிலும் வழிநடத்தியவர். அவரின் வாழ்வு எமக்கு ஒரு முன் மாதிரியாக, வழிப்படுத்தலாக அமைந்திருந்தது.

யாழ்ப்பாணத்தில், அமெரிக்கமிஷனரிமார் ஆற்றிய பணியில் விளைந்த முத்து சபாபதி குலேந்திரன் என்று எமது மறைந்த பேராயர் டி. ஜே. அம்பலவாணர் குறிப்பிட்டமையைப் பெருமையுடன் இச்சந்தர்ப்பத்திலே நினைவு கூருகின்றேன். மிஷனரிமாரின் சேவையிலே பிறந்த முத்தாக மாத்திரமன்றி, எமது திருச்சபையின் சொத்தாகவும் அவர் திகழ்ந்தார்.

1900மாம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23ஆம் திகதி எமது மறைமாவட்டத்தின் விடிவெள்ளி, இந்த மானிப்பாய் மண்ணிலே தான் தோன்றியது. வடமராட்சியின் ஊற்று, வரணியின் வளம், மானிப்பாயில் சங்கமம், ஆகியதன் பேறே எமது மறைந்த பேராயர்.

வேர்விட்டு, விழுதெறிந்து, கிளைபரப்பி எல்லோர்க்கும் நிழல் தந்த பேரால விருட்சம் ஒன்று, சிறுவித்தாக விழுந்து முளைத்து வளர்ந்த இப்பதியிலே, அவர் ஆரம்பக் கல்விபெற்ற இப்பாடசாலையிலே இன்று, நின்று அவரது பணிகளை நினைவுகூரும் பொழுது என் நெஞ்சு நிறைகின்றது.

பேராயர் சபாபதி குலேந்திரன் பற்றிய நிகழ்வுகள் நிழற்படமாய் என் நெஞ்சத்திரையிலே விரிகின்றன.

பேராயர் சபாபதி குலேந்திரன் அவர்கள் பல்பரிமாண ஆளுமை மிக்கவர். அவரின் ஆளுமையின் சில கூறுகளை நான் கண்டும், கேட்டும்மகிழ்ந்தவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று எண்ணுகின்றேன்.

எமது பேராயர் பிறந்து நூறாண்டுகளும், மறைந்து எட்டு ஆண்டுகளும் ஆகின்றன. அவர் வாழ்ந்த 92 வருட வாழ்வுக்காலம் எமதுமறைமாவட்டத்தின் வரலாற்றின் முக்கிய, பல மாற்றங்களை, திருப்புமுனைகளைக் கண்ட காலம் எனலாம்.

கற்றலும், கற்றவழி நிற்றலும் தமது கடமையாகக் கொண்ட பேராயர், நல்ல மேய்ப்பனாக நின்று எமது மறைமாவட்ட மக்களைக் காத்தார். எமது சபைக்குச் சோதனைகள் பல வந்தபோது அந்தச் சவால்களுக்கெல்லாம் முகம் கொடுத்து, ஒரு வீரத் தளபதிக்குரிய பேராற்றலுடன் செயற்பட்டார். கடும் புயலையும் கொடும் கொந்தளிப்பையும் தாண்டி எமது மறைமாவட்டம் என்னும் கப்பலை வழிநடத்திய மீகாமன் ஆக — மாலுமியாக விளங்கினார்.

உதாரணங்களை ஒவ்வொன்றாக விரிக்கின் நேரம் போதாது என்று அஞ்சி ஒரு சில சம்பவங்களை — நிகழ்ச்சிகளைச் சுட்டிக் காட்டலாம் என்று எண்ணுகின்றேன்.

1. எமது சபைப் புனர் உத்தாரணம்
2. 1960 ஆம் ஆண்டு உடுவில் மகளிர் கல்லூரியை அரசாங்கம் சுவீகரிக்க எத்தனித்தபொழுது
3. யாழ்ப்பாணக் கல்லூரியையும் நூலகத்தையும் யாழ் பல்கலைக்கழகத்திற்காக சுவீகரித்தபொழுது

இப்படிப் பலபல, காட்டாறுகளை எதிர் நீச்சல் அடித்துக் கடந்திருக்கின்றார். அதற்குரிய ஆளுமையையும் பலத்தையும் ஆண்டவன் அவருக்கு நல்கி இருந்தார். உடுவில் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி தமது செல்வங்கள் என அடிக்கடி கூறுவார்.

தமது காலத்தின் மிகச்சிறந்த கல்வி மானாகவும், சிறந்த ஆராய்ச்சியாளனாகவும் திகழ்ந்தவர். குன்றா உழைப்பாலும், குறையா அறிவாலும், நுண்ணிய நூல் பல செய்பவர், உலகம் உவப்ப பருந்து பரிந்து பாராட்டப்பட்ட பற்பல நூல்களைத் தந்து எமது மறைமாவட்டத்திற்குப் பெருமை சேர்த்தவர்.

பேராயர் சபாபதி குலேந்திரன் அவர்களின் வாழ்வின் வெற்றிக்குப் பல காரணங்கள் உண்டு.

ஒழுங்கு, கட்டுப்பாடு, திட்டமிடல், செயற்திறன், சுறுசுறுப்பு, செய்து முடிக்கும் ஆற்றல், கற்றல், மனந்திறந்து நண்பர்களுடன் உரையாடுதல், இப்படி இப்படி நாம் அவரிடம் கண்டவை பல, கற்றவை இன்னும் பல.

ஒரு கல்வியாளனுக்கு இருக்க வேண்டிய அறிவுப்பலம், நிறைவு, ஒரு ஆய்வாளனுக்கு இருக்க வேண்டிய உழைப்பு, நடுவுநிலைமை, ஒரு நிர்வாகிக்கு இருக்க வேண்டிய நிதானம், பக்கம் சாராமை, அரசியலாளன் ஒருவனுக்கு இருக்க வேண்டிய திடசங்கற்பம், தீர்க்கதரிசனம், இவை எல்லாவற்றையும் உள்வாங்கி, ஒரு சமய வாழ்வியலாளனுக்கு இருக்க வேண்டிய பிரார்த்தனை, கனிவு, கருணை, பணிவு, பண்பு முதலான எல்லாம் நிறைந்த ஒரு நற்களஞ்சியமாகத் திகழ்ந்தவர் பேராயர் சபாபதி குலேந்திரன் அவர்கள்.

மறைமாவட்டச் செயற்பாடுகளுக்கும் அப்பால் அவர் எமது குடும்பத்துடன் வைத்திருந்த உறவுத் தொடர்புகளை ஒருகணம் எண்ணிப் பார்க்கின்றேன். அந்தப் பசுமையான நிகழ்வுகளை, அழியாத கோலங்களை அசைபோடுவதில் ஒரு இதமான சுகம் தோன்றுகின்றது.

எனது தந்தையாரின் இனிய நண்பனாய், நல்ல ஆலோசகராக விளங்கினார். எமது குடும்பத்தினரோடு ஒட்டி உறவாடி கழித்த நாள்கள்....... பெரும்பாலான நாட்களில் ஞாயிற்றுக்கிழமைகளிலே எங்களோடு இரவு உணவு உண்ட நாள்களை எண்ணிப் பார்க்கிறேன்.

எனது தாயாரின் மறைவினால் துக்கத்தில் ஆழ்ந்திருந்த எமது குடும்பத்தினருக்கு விசேடமாக எமது தகப்பனாருக்கு ஆறுதல் அளிக்கும் சகாயனாக இருந்த நாள்களை எண்ணிப் பார்க்கிறேன்.

எமது குடும்பத்தில் என்ன விசேட நிகழ்வென்றாலும் பேராயர் சபாபதி குலேந்திரனின் வருகை நிகழும். எங்களில் ஒருவராகஇ எங்களோடு ஒருவராக வாழ்ந்த பேராயர் குலேந்திரன் அவர்களிடம் நான் கண்ட ஒரு சிறப்பு அம்சத்தைக் கூறி எனது உரையை நிறைவு செய்யலாம் என்று எண்ணுகின்றேன்

மற்றவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதைப் பார்க்க விரும்புபவனே நகைச்சுவையாளனாக இருப்பான் என்பார்கள். நகைச்சுவை எல்லோருக்கும் வருவதல்ல. ஒரு சிலருக்கே அது கொடையாக அமைகின்றது. மற்றவர்களின் சிரிப்பிலே மனநிறைவைக் காணப் பழகியவர், பயிற்றவர் பனிதருள் மாணிக்கம் தான். இயல்பானஇ எவரின் மனமும் புண்படாதுஇ எண்ணி எண்ணி இறும் பூதெய்தவைக்கும் நகைச்சுவை உரையாடலை அவரிடம் கண்டேன். இவருடைய நகைச்சுவைக் கதைகளை கேட்பதற்கு எமது குடும்பத்தினர் அவரைச் சுற்றி இருப்பதை நினைத்துப் பார்க்கின்றேன்.

சென்ற காலத்தின் சிறப்பையும், நிகழ்காலத்தின் திறனையும் இனி வருங் காலத்தின் பெருமைகளையும் உய்த்துணர்ந்து வாழ்ந்து காட்டிய பெருமைக்குரிய பேராயர் சபாபதி குலேந்திரன் அவர்களுடைய நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்ட மனநிறைவோடு உங்களிடம் இருந்து விடைபெறுகின்றேன்.

சி. வி. செல்லையா
அதிபர்
உடுவில் மகளிர் கல்லூரி

# பிறவிக் குருடன்

எனது பெயர் சாந்தி, எனக்கு பிறவியிலே கண் குருடாயிருந்தது. அப்போது எனக்கு உதவ யாரும் இல்லை. எனது சகோதரர் பெற்றோர் எல்லோரும் என்னை துன்புறுத்திக் கொண்டிருப்பார்கள். ஒருநாள் எனது வீட்டில் நடக்கும் துன்பத்தை தாங்கமுடியாமல் மிகவும் வேதனை தாங்கமுடியாமல் வீட்டை விட்டு வெளியே ஓடி வந்துஒரு மரத்தடியில் கவலையுடன் அழுது கொண்டிருந்தேன். அப்பொழுது ஏதோ சத்தத்துடன் சனக்கூட்டம் வருவதைப் போல் இருந்தது. எனக்கு அதனைப் பார்க்க ஆசையாய் இருந்தது. ஆனால் பார்க்க கண் இல்லை. தூரத்தில் கேட்ட அந்த ஓசை எனக்கருகில் கேட்பது போல தெரிந்தது. அப்பொழுது நான் அதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். அவர்கள் என்னைக் கண்டு இயேசுவை நோக்கிக் கேட்டார்கள் இவள் குருடியாய் பிறந்தது யார் செய்த பாவம். இவள் செய்த பாவமோ அல்லது இவள் பெற்றோர் செய்த பாவமோஎன்று கேட்டார்கள். அப்பொழுது அவர்களுக்கு ஆண்டவர் சொன்னார் இவள் செய்த பாவமும் அல்ல. அவள் பெற்றோர் செய்த பாவமும் அல்ல. இவள் தேவனுடைய கிரியைகள் இவளிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தாள் என்று சொன்னார். அப்பொழுது அவர்களிடம் யார் இங்கு வருகின்றது என்று கேட்டேன். அப்பொழுது அவர்கள் சொன்னார்கள் ஆண்டவராகிய இயேசு வருகிறார் என்றனர். நான் மிகவும் ஆவலுடன் இயேசுவே இயேசுவே எனக்கு கண்களை திறந்தருளும் என்று கத்தினேன். அப்பொழுது அவர்கள் எல்லாம் என்னை விரட்டினார்கள். நானோ போகாமல் இயேசு இயேசு என்று கத்தினேன். அப்பொழுது இயேசு என்னைக் கூப்பிட்டு உனக்கு என்ன செய்ய வேண்டும் என்றார். அப்பொழுது நான் சொன்னேன் என் கண்களை திறந்தருளும் என்றேன். அவர் உடனே ஆசையுடன் உமிழ் நீரினால் சேற்றை உண்டாக்கி அப்பி எனது கண்களிலே பூசி கோணாவில் குளத்தில் கழுவு என்றார். உடனே கழுவினேன். என் கண்கள் இரண்டும் திறக்கப்பட்டன. நான் இயேசுவின் பின்னே சென்றேன்.

# காணாமற் போன ஆடு

நான் ஒரு ஆடு. என்னை ஒரு மேய்ப்பன் மேய்த்து வந்தான். ஒவ்வொரு நாளும் நூறு ஆடுகளை மேய்ப்பான். ஒருநாள் ஆடுகளைக் கலைத்து வந்தான். அப்பொழுது நான் தனியே மேய்ந்து கொண்டிருந்தேன். அப்பொழுது மேய்ப்பன் மற்ற ஆடுகளைக் கலைத்துச் சென்று விட்டான். நான் போய் ஒரு முட்செடியில் சிக்கிக் கொண்டேன். மேய்ப்பன் ஆடுகளை எண்ணிவிட்டு ஒரு ஆட்டைக் காணவில்லையே என்று கவலையுடன் தேடிச் சென்றான். தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்திலே விட்டு விட்டு காணாமற் போன ஆட்டைத் தேடி என்னிடம் வந்தார். நானோ அந்த முட்செடியிலிருந்து வெளியே வரமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தேன். என்னைக் கண்ட மேய்ப்பன் முட்செடியிலிருந்து என்னைத் தூக்கி எடுத்துத் தோளில் போட்டுச் சென்று வனாந்தரத்திலுள்ள ஆடுகளோடு விட்டார். நான் சந்தோஷப்பட்டேன்.

# தழுத்தாகுமின் கதை

எனது அப்பா கோணாவில் கிராமத்தில் உள்ள ஜெப ஆலயத்திற்கு பொறுப்பாய் இருந்தார். நான் அவருக்கு ஒரே ஒரு செல்ல மகனாய் இருந்து வந்தேன். அப்பொழுது எனக்கு வருத்தம் வந்து சாகும் தறுவாயில் இருந்தேன். எனது அப்பா ஆண்டவராகிய இயேசுவிடம் சென்று எனது மகள் சாகும் தறுவாயில் இருக்கின்றார். நீர் வந்து உம்முடைய கையை எனது மகளின் மீது வையும் என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்தார். அப்பொழுது நான் இறந்து விட்டேன். எனது அப்பா அம்மா எல்லோரும் கதறி அழுதார்கள்.பின்பு இயேசுவும் அவரின் சீஷரில் இருவரும் வந்தார்கள். பின் தழுத்தாகும் நீயே எழுந்திரு என்று எனது கையைப் பிடித்தார். நான் உடனே எழுந்து நடந்தேன். வீட்டிலுள்ள எல்லோரும் அதிசயப்பட்டார்கள். இயேசு எனது அம்மாவிடம் சொன்னார் எனக்கு உணவு கொடுக்கும்படி. நான் சாப்பிட்டு விட்டு பின் சென்றேன்

## EDITORIAL

### *Exodus from Jaffna*

*It has been reported that more than 50,000 people left Jaffna during the past one month and another 35,000 are waiting for their passage to Colombo. Even though the ship 'City of Trinco' brings back people from Colombo to Jaffna, it is a rather small segment compared to the large number which are fleeing from the peninsula. According to reliable information 21 Sri Lankan Tamils are leaving the country for good, every day. No doubt the situation in Jaffna is not conducive for people to live. How long can a person live with his family in the midst of war and rumours of war? Large tracts cultivable lands in the peninsula have been made uncultivable by the use of excessive chemicals by the warring parties. The prospect of good education and good medical care remain poor. But the people who are leaving the land for good should realize that they are weakening their Homeland. There is a subtle persuasion to send the people out of the peninsula. 'Each man for himself and God for us all' has become the guiding principle of those who are languishing in the peninsula. Even though Chavakachcheri is now under the army control, the inhabitants are not permitted to occupy their houses. The people of Thenmaradchy are living in the houses of relations and friends of Valikamam and Vadamaradchy. In the Islands the population had become very thin. Have we decided to abandon Jaffna? Our repatriates in foreign countries must think about this with all seriousness. Otherwise they will regret that they have been supporting a lost cause. The ground realities are bitter, but they are true. Unless we have the dedication of the Jews, we cannot salvage our Homeland. Jews who were living in affluence in various parts of the world came to live in Palestine to safeguard their land. We are running away from our land and then make the biggest noise for a separate state.*

### DEACONS ORDINATION at Vaddukoddai



Rev. Joshua Sivagnanam & Rev. Antony Suthagar (with Spectacles) are standing on either side of the Bishop. Rev. K. Karunasekera, the Methodist Minister who preached at the service is in coat & suit.

### Deacons' Ordination:

*Bro. T.S. Joshua , Assistant Worker, Vaddukoddai and Bro. J. Antony Suthahar, worker in-charge Kudattanai were ordained Deacons at the Diocesan Festival on the 27th September. Rev. Karunasekera, the Superintending Minister, Methodist Church Jaffna preached at the service.*

*Rev. T.S. Joshua and Rev. J. Antony Suthahar had their theological education at the Christian Theological Seminary, Chunnakam. They obtained their Diplomas in April 1998.*

### Doug Hadley's Comments about Changing the Mind of the Church:

Although there are few of us who remember when African Americans were officially discriminated against in the church.

I'm sure you remember the days when divorce and remarriage was considered unacceptable in our church. But finally a critical mass of those who had been divorced and remarried and were living in faithful, committed relationships realised that this exclusion was wrong. They and their supporters began to work to educate the church and change its corporate mind. This change has taken place, and now this group is not excluded from any part of the life of the church or refused access to any of the sacraments.

I'm sure you remember the days when women were not allowed to serve on vestries. This could not happen until General Convention made a change in 1964. Now, we realise that women add a great deal to our corporate life by serving on vestries.

I'm sure you remember the days when women were denied access to the ordination process. But by action of General Convention this was changed. It was changed because women were called to ordination, and an increasing number of people recognised this as being an injustice. There was much bitterness and many people felt that this would be the downfall of the church. But now our community is enriched by the presence of many fine women clergy.

All of these changes have come about because a group – a minority in the beginning and eventually a majority – called for change. All of these changes were made in order to INCLUDE another group, and had nothing to do with excluding anyone who was already part of the church. But as a result of each of these changes, people left the church, thereby excluding themselves and cutting themselves off from the church community.

There are very few people in the church today who would still argue that these were bad changes, although of course there are some who still refuse to ordain women and even some who feel that divorce and remarriage is inappropriate. However, the large, diverse, ponderous body of the church has changed, and most of us believe the Holy Spirit is in these changes.

I am certain that the struggle for full inclusion of gays and lesbians is moving along this same trajectory. It began with a few of us realising that our exclusion from access to all of the sacraments was an injustice. Then more and more of us began to speak out, and many non-gays joined with us calling for change. Now, those opposed to full inclusion are only a slight majority. Within a few years, the balance will shift, just as it has with the issues I've mentioned above. The church WILL move forward, and just as it finds itself now apologising for its discrimination against African Americans and women, it will one day understand and act on its need to apologise to faithful, God-centred gays and lesbians. As Bob Dylan said, Get out of the way if you can't lend a hand, cause the times they are a'changing.

Mar Goman

## SYNOD YOUTH FESTIVAL 2000

I am glad to inform you that the Synod Youth Festival 2000 will be held at a serene village called Kasam in the Diocese of Vellore in South India. We expect about 2500 young people from all over the CSI to congregate for four days from November 2nd to 5th committing themselves for the building of the kingdom of God.Please do uphold this in prayers. 2500 people for four days means quite a big expense but then the enthusiasm is much greater and the fruits would be much more worth relishing.

*Shalom*
*Rev. Vinod Victor*
*Synod Youth Secretary., CSI*

## 03-09-2000 அன்று சகோதரன் த. டானியல் ரஞ்சித் உதவிக் குரவாக கொழும்பு தென்னிந்தியத் திருச்சபை தேவாலயத்தில் அபிஷேகம் செய்யப்பட்டார். அன்றைய தினம் பேராயர் எஸ். ஜெபநேசன் ஆற்றிய அருளுரை.

மீகா 6—8

"மனிதனே நலமானது இன்னதென அவர் உனக்கு தெரிவித்திருக்கிறார்.
நியாயஞ் செய்து இரக்கத்தைப் பாராட்டி உன் கடவுளுக்கு முன்பாக
மனத்தாழ்மையாய் நடப்பதையே அல்லாமல் வேறே எதைக் கர்த்தர் கேட்கிறார்."

மீகா கி.மு 8ம் நூற்றாண்டில் வாழ்ந்த தீர்க்கதரிசியாவார். மீகா என்பதன் பொருள் யாவேயைப் போல் யார் என்பதாகும். இவர் ஆமோஸ், ஓசியா, முதலாம் ஏசாயா போன்றவர்கள் போல் 8ம் நூற்றாண்டில் வாழ்ந்த தீர்க்கதரிசியாவார்.

இவர்கள் எல்லாரும் இஸ்ரவேல் சமுதாயத்தில் காணப்பட்ட கொடுமைகளைப் பற்றி தீர்க்க தரிசனம் கூறினார்கள் இதனாலே வடநாடு அந்நியர் வசப்படும் என்றும் மக்கள் கடவுளினாலே தண்டிக்கப்படுவர் என்றும் தீர்க்கதரிசனம் உரைத்தனர். மேலும் மீக்கா ஏழை மக்களோடு உறவாடியவர். அவர்களுடைய கஷ்டங்களையும் துன்பங்களையும் அறிந்தவர்.

இதனாலே இவர் ஏழைகளின் தீர்க்கர் என்றும் கூறப்பட்டார்.

ஆடம்பரமாக வாழ்ந்த இஸ்ரவேல் மக்களை, அதிகாரத்தின் மமதையிலிருந்த மக்களை பார்த்துத்தான் மீகா இவ்வாறு தீர்க்க தரிசனம் உரைத்தார்.

" நியாயஞ் செய்து மனதார இரக்கத்தைப் பாராட்டி உன் கடவுளுக்கு முன்பாக மனத் தாழ்மையாய் நடப்பதையே அல்லாமல் வேறே எதைக் கர்த்தர் கேட்கிறார் "

மீகாவின் செய்தி கிறிஸ்தவர்களாகிய நமக்கு, குறிப்பாக ஆண்டவர் ஊழியக்காராராக பணியாற்ற இருப்பவர்களிற்கு மிகவும் அவசியமாகும்.

இன்று நாம் போரின் மத்தியிலும், போரின் வதந்திகள் மத்தியிலும், வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஏழைகள் மேலும் மேலும் ஏழைகளாகிக் கொண்டிருக்கின்றனர். தமிழ் மக்கள் அனுபவித்து வரும் துன்பங்களிற்கு அளவேயில்லை. யார் எங்களுடைய பிரச்சனைகளை விளங்கிக் கொள்வார்கள். யார் எம்முடன் அன்பாகப் பேசுவார்கள் என்று மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கின்றனர்.

மீகா தீர்க்கதரிசி இப்படியான ஒரு காலகட்டத்தில் வாழ்ந்தபடியால் தான், ஏழைகளின் கண்ணீரை அறிந்தபடியால் தான் மனத்தாழ்மையாய் நடக்க வேண்டும் எனக் கூறினார்.

மனத் தாழ்மையாய் நடப்பது என்பது நான் ஒன்றும் இல்லை அல்லது நான் அற்பன் என்று சொல்வது அல்ல. மாறாக அதனுடைய பொருள் கடவுளுடைய தோழனாய் பணிவுடன் நடந்து கொள்வதாகும்.

ஏனோக்குவை கடவுளுள் சஞ்சரித்த மனிதன் என்கிறோம்.

தமிழ் இலக்கியத்தில் சுந்தரமூர்த்திநாயனார் என்னுடைய தோழனுமாய்

நான் செய்யும் துருசிகளுக்குக் குருடாகி என்று பாடுவதைக் காண்கிறோம். இந்தகைய அன்னியோன்னிய நிலையையே அவசியமானது என்கிறார் மீகா.

நாம் கடவுளுக்கு முன்பாக தாழ்மையாய் நடந்து கொள்வதற்கு பல காரணங்கள் உண்டு.

" முதலாவது கடவுளே தாழ்மையானவர்

நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

என் நுகம் மெதுமையும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்."

( மத்தேயு 11ஹ29ஹ30)

இன்று உலகம் புகழையும், அதிகாரத்தையும், தலைமைப் பதவியையும், மற்றவர்களை அடிபணியச் செய்யவேண்டும் என்ற ஆசையிலும் அலைகின்றனர். தலைவர்களாக இருக்க விரும்புபவர்கள் ஆயிரம் ஆயிரம், தொண்டர்களாக இருக்க விரும்புவோர் வெகு சிலர். தொண்டர்கள் அமைதியாக மற்றவர்களின் கண்களுக்குத் தெரியாமல் தமது பணியைச் செய்வார்கள். ஆனால் அவர்களை உலகம் கண்டு கொள்வதில்லை. ஆனால் இயேசு கிறிஸ்து உலகத்தில் வாழ்ந்த பொழுது தம்மைப் பின்பற்றுபவர்கள் ஆரவாரமும் அவசரமும் இன்றிப் பணி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார். அதாவது திருச்சபை தோன்றும் முன்னரே செபதேயுவின் குமாரன் மூலமாக அவருடைய அடியவர் எவ்வாறு பணி செய்ய வேண்டும் என்று உணர்த்தி விட்டிருந்தார்.

இயேசு அவர்களை நோக்கி நீங்கள் கேட்டுக் கொள்வது இன்னது என்று உங்களிற்கே தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை பெறவும் உங்களால் கூடுமா என்றார்.

உங்களில் எவராகிலும் பெரியவனாக இருக்க விரும்பினால் அவன் உங்களுக்கு பணிவிடைக்காரனாக இருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாக இருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாய் இருக்கக்கடவன் என்றார்.

அவசரம், ஆரவாரம், ஆடம்பரம் மனிதனின் பண்பு. அமைதி மென்மை மெதுமெதுவாக செயற்படுவது கடவுளின் பண்பு.

பேராயர் சபாபதி குலேந்திரன் தாம் மரிக்க முன்னர் தாம் எழுதிய நூல் ஒன்றில் எனக்கு எழுதிக் கொடுத்த வாசகம்

***The Wheels of God Grind Slowly***
***but they Grind Extremely Small.***

எலியாத்தீர்க்கன் சோர்வடைந்த நிலையில் கடவுளின் வார்த்தையை எதிர்பார்த்து இருந்தான். முதலில் பலத்த பெரும் காற்று. பின்னர் பூமியதிர்ச்சி அதனைத் தொடர்ந்து பெருநெருப்பு. அப்பொழுது எல்லாம் கடவுளின் வார்த்தை அவனுக்குக் கிடைக்கவில்லை. இவற்றைத் தொடர்ந்து அமைதி, அந்த அமைதியில் எலியா கடவுளின் சத்தத்தை தெளிவாகக் கேட்டான். ( 1 இராஜா 19ஹ12)

கடவுள் பணியைப் போல் (ர்நஎநெடல ஞுநற) அவசரம் இன்றி மெதுவாக செயற்படுவது கடவுளின் தன்மை. அது வெற்றி அளிக்கிறது.

மூதுரையில் ஒரு அருமையான பாடல் இருக்கிறது. கடுஞ் சொற்கள் ஒருபொழுதும் மெல்லிய சொற்களை வெல்லமாட்டா. யானை துளைத்துச் செல்லும் இரும்பு பஞ்சிலே பாயாது. இரும்பு அலவாங்கிற்கு இடங்கொடாது. மலைப்பாறை, பச்சை, நெக்குவிடும்

**வெட்டெனவை மெல்லெனவை வெல்லாவாம்**
**வேழத்தில் பட்டுருவும் கோல் பஞ்சிதான் பாயாது**
**நெட்டிருப்புப் பாறைக்கு நெக்குவிடாப் பாறை**
**பதமரத்தின் வேருக்கு நெக்குவரும்.**

பாரில் இறைவன் படைத்ததையெல்லாம், பாழும் மனிதன் தன் அவசரத்தால், அகங்காரத்தால் அழித்து விடுகிறான். சுவாமி விவேகனந்தர் அமெரிக்காவில் தனது பிரசித்திபெற்ற சிக்காக்கோ பிரசங்கத்தை முடித்திருந்த காலம். அப்பொழுது அமெரிக்காவில் பிரபல கோடீஸ்வரர் வந்து தன் வீட்டிற்கு வரவேண்டும் என்றும் தன் தொழிற்சாலையைப் பார்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். சுவாமி விவேகானந்தர் அவரின் தொழிற்சாலைக்கு சென்று விஞ்ஞானத்தின் வியத்தகு முன்னேற்றத்தைக் கண்டார். தொழிற்சாலையின் ஓரிடத்தில் ஒரு Belt இல் உயிருடன் ஒரு பன்றி வைக்கப்பட்டு மறுபுறமாக அந்தப் பன்றியின் இறைச்சி வைக்கப்பட்டு Tin இல் அடைக்கப்பட்டு Label ஒட்டப்பட்டு Belt மூலமாக வருகிறது. விவேகானந்தர் மனிதனின் செயற்பாட்டைப் பார்த்தார். கடவுளின் செயற்பாட்டை அத்தொழில் அதிபருக்கு விளக்க முனைந்தார். அவர் தொழிலதிபரைக் கேட்டது எல்லாம் இதை மற்றைய வளமாகச் செய்ய முடியுமா ? அதன் Tinfis இந்தப்புறமாக அனுப்புங்கள். அந்தப் பக்கமாக பன்றி குதித்துக்கொண்டு வருகிறதா பார்ப்போம் என்கிறார். இதுதான் மனித சக்திக்கும் கடவுளின் சக்திக்கும் வித்தியாசம். மனிதன் அவசரப்பட்டு அழிக்கிறான். கடவுள் ஆறுதலாக, அமைதியாக வாழ்க்கையை அமைக்கிறான்.

சாது சுந்தரசிங் ஒருமுறை மேல்நாடு ஒன்றில் இருந்தபொழுது அவர் தங்கியிருந்த வீட்டிற்கு மேலாக ஒரு ஆகாய விமானம் பெருத்த இரைச்சலுடன் பறந்து சென்றது. அப்பொழுது சாது இதுதான் கடவுளுக்கும் மனிதனுக்கும் பெரும் வித்தியாசம். கடவுள் படைத்த குயிலும் கிளியும் சிட்டுக்குருவியும் தூக்கணான் குருவியும் எவ்வளவு சந்தோஷமாக இனிமையாகப் பாடுகின்றன. எவ்வளவு அமைதியாக ஆரவாரம் இன்றி கடவுள் சிருஷ்டிப்பும் பணியை மேற்கொள்கிறார். இதனைத் தான் இயேசு கிறிஸ்து உலகிலே வலியுறுத்தினார்.

நாம் தாழ்மையுள்ளவராக வருகின்றபொழுது எந்தச் சிறிய காரியத்தையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் செய்வோம். ஓய்வுநாட் பாடசாலையில் படிப்பித்தல் பெண்களிற்குரிய கடமை என்று கருதுகிறோம். அமைதியுள்ளம் படைத்த ஜிம்மி கார்ட்டர் அமெரிக்க ஜனாதிபதியாக வருமுன்னரும் வந்த பின்னரும் ஓய்வுநாட் பாடசாலை ஆசிரியராக பணிபுரிந்தார்.

நமக்கு அவசரம் நோயாளிகளை சந்திக்க நேரமில்லை. நமக்கு அருமையானவர்களை சந்திக்க நேரமில்லை. மூன்று துறைகளில் கலாநிதிப் பட்டம் பெற்ற அல்பேர்ட் சுவைட்சர். ஜெர்மன் மக்கள் மத்தியில் எனது புகழ் பரவத் தேவையில்லை. ஆபிரிக்காவின் காப்பிலி நாட்டிலே எனது பணி தொடரட்டும் என்று லம்பரினில் தனது மருந்துச் சாலையை ஆரம்பித்தார். கடவுளின் நண்பர்கள் தாழ்மையோடு கடவுளின் பணியையே செய்ய விரும்புவார்கள். யாழ்ப்பாணக் கல்லூரியிலே பேராசிரியராக விளங்கியவர் G.D. Thomas. அவருக்கு கடவுளின் அழைப்பு வந்தது. பேராசிரியர் பதவியை உதறித்தள்ளிவிட்டு வேத சாஸ்திரக் கல்லூரியில் சேர்ந்து வேதசாஸ்திரம் கற்று மூளாயில் உபதேசியானார். அவரைப் பலர் ஏளனம் செய்து இருக்கலாம். அவரைப் பொறுத்த அளவில் நலமானது இன்னது எனக் கண்டு கொண்டார். நியாயஞ் செய்து மனதார இரக்கத்தைப் பாராட்டி உன் கடவுளுக்கு முன்பாக மனத் தாழ்மையாய் நடப்பதையே அல்லாமல் வேறே எதைக் கர்த்தர் கேட்கிறார்.

## Sermon preached at the Deacon Ordination Service by Rev. K. Karunasekera on 27th September 2000

*Exodus: 18: 13 - 17*
*Acts: 6: 1 - 7*

*Today the Church of South India Jaffna Diocese is going to ordain Rev. Thuraisamy Joshua and Rev. Jeganathan Antony Suthahar as Deacons. From today onwards these two brothers will have full authority to play the role of a Deacon, and to face and solve the problems of the society. They have dedicated themselves as servants of God and of the Society. Their vision and service to the people in the society can vary according to the situation. However their cardinal task is to face and solve the problems of thesociety and to care for their well being. Therefore these Deacons will be sent out today as problem solvers.*

*The word Deacon is derived from the Greek word "Diakonos" which means servant. The old as well as the new testaments reveal that the Deacons are the servants of the public, where they have a mission to understand their problems and to counsel them. Invariably the Deacons become creators of a new society. We do expect the same mission and vision from these two brothers.*

*In Exodus 18 : 13 - 17 , we come across how Jethro advises Moses to share his leadership with others, so that many people will have the opportunity of going to these leaders with their problems and be counselled by them. Similarly in*
*Acts 6 : 1 - 7 the apostles appointed seven men to look into the problems that existed in the society during their time. Therefore it is obvious that there's a dire need in the society for someone who will be at their doorstep whenever they need help.5*

*Hence our society expects some special qualities from these helpers ( Deacons). Both in the Old Testament and New Testament Moses and the apostles were very careful in the selection of their helpers.*

*Recently, I met a young man who said 'Nowadays we hardly find a dedicated clergy in the churches'. We hardly find a dedicated clergy in the churches because most of them choose the ministry when all else fails and unlike in the olden days children are not dedicated to the church and its ministry. I did not say anything against this statement. But I realized that people expect certain special qualities from those who have dedicated their lives to the service of God.*

*It is true even in the scriptures that when Moses and apostles selected their helpers they expected special qualities as follows: 1) Fear of God; (2) Man of Truth, 3) Hating covetousness (4) Men of honest report, (5) Full of the Holy Ghost, (6) Wisdom. The above qualities can be seen among the laymen. But the church expects a higher degree of these qualities from their clergy.*

*We are living in a difficult era. This millennium will not be easy for many, especially for the people of Jaffna. These two brothers have to face a lot of challenges such as ecological problems due to various factors, innocent deaths that have been going in the past decade, the problems of increasing number of widows, orphans, decrease in moral values, negligence of the human values, increasing violence and injustice. When you face these challenges you have to struggle with them and not run away from them.*

*The problems faced by the leaders and helpers of the Old and New Testaments were not identical. However they were able to handle their problems successfully because they had all the qualities of a higher degree which I mentioned earlier.*
*At this ordination service the Diocese of Jaffna and I expect these qualities from you and to be able to face the society and be successful in your ministry. I wish you both to promote these qualities from today onwards until you and your life in Christ.*

Printed for the American Ceylon Mission, Diocesan Office, Vaddukoddai, Sri Lanka.